ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி-**8**
நாட்டு நலப்பணித் திட்டம் அலகு எண்:**003** மற்றும் **143**
தகவல் அறியும் உரிமை வாரவிழா அறிக்கை

தேதி: **22.10.2025**

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு எண்:003 மற்றும் 143 சார்பாக இன்று கல்லூரி வளாகத்தில் தகவல் அறியும் உரிமை வார விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் முதலில் மூன்றாம் ஆண்டு இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல் மாணவி செல்வி. ரேணுகாஸ் தகவல் அறியும் உரிமை சட்டம் பற்றி மாணவிகளுக்கு மிகச்சிறந்த உரை நிகழ்த்தினார்.

பின்னர் மாணவிகளுக்கு வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் 50மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த வினாடி வினா நிகழ்வில் முதுகலை வரலாற்று துறை இரண்டாம் ஆண்டு மாணவி எஸ். கிருத்திகா முதல் பரிசையும், முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் துறை மாணவி பானுமதி இரண்டாம் பரிசையும், முதுகலை இரண்டாம் ஆண்டு வரலாற்று துறை மாணவி காயத்ரி மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் மற்றுமொறு பகுதியாக கட்டுரை எழுதும் போட்டியும் நடைபெற்றது. இதில் மாணவர்கள் RTI சட்டம் பற்றிய தங்களது அறிவை வெளிப்படுத்தினர். மூன்று போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.கட்டுரை எழுதும் போட்டியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு கணிதவியல் துறை மாணவி சீதாலெட்சுமி முதல் பரிசையும், இளங்கலை மூன்றாம் ஆண்டு சமூகவியல் துறை மாணவி தேவி இரண்டாம் பரிசையும், முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் துறை மாணவி அன்னபூரணி மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் நோக்கம் மாணவர்களிடையே தகவல் அறியும் உரிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இந்நிகழ்வு மாணவர்களுக்கு ஜனநாயக உரிமைகளை புரிந்துகொள்ள உதவியது. இவ்விழா வெற்றிகரமாக நிறைவுற்றது.


Right To Information Act
Quiz Competition
Date : 22.10.2025
NATIONAL SERVICE SCHEME
NOT ME
BUT YOU
UNIT NO :


Right To Information Act
Quiz Competition
NATIONAL SERVICE
NOT ME
UNIT NO :


R.A.G.C.W.60.


GPS Map Camera
Tirunelveli, Tamil Nadu, India
Pmw6+7f8, Palayapettai, Tirunelveli, Tamil Nadu 627008, India
Lat 8.746347° Long 77.66074°
Wednesday, 22/10/2025 02:19 PM GMT +05:30
Google


NATIONAL SERVICE SCHEME
NOT ME
BUT YOU